**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 9 July 2021

# சுற்றுச்சூழல் நிலைத்தன்மை முயற்சிகளில் இளையர்கள் ஈடுபட புதிய திட்டம் அறிமுகம்

சுற்றுச்சூழல் நிலைத்தன்மைத் திட்டங்களில் இளையர்கள் ஈடுபட வழிவகுக்கும் புதிய திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது.

‘சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்காக இளையர் (YES)’ எனும் இந்த ஓராண்டுகாலத் திட்டத்தை தேசிய சுற்றுப்புற வாரியம் நேற்று அறிமுகம் செய்தது. இத்திட்டத்தின்வழி, முக்கியச் சுற்றுப்புறப் பிரச்சினைகளைக் களைவதற்கான திட்டங்களை அல்லது இயக்கங்களை முன்னெடுத்து, வழிநடத்தும் வாய்ப்பு இளையர்களுக்குக் கிடைக்கும்.

‘யெஸ்’ தலைமைத்துவத் திட்டத்தில் இளையர்கள் சேர்க்கப்பட்டு, பசுமைத் துறைத் தலைவர்களாக உருவெடுக்க பயற்சி பெறுவார்கள் என்று தேசிய சுற்றுப்புற வாரியம் அதன் அறிக்கையில் தெரிவித்தது.

இவ்வாண்டு டிசம்பரில் தொடங்கும் பயிற்சி ஒன்பது முதல் 12 மாதங்கள் வரை நீடிக்கும். சுற்றுச்சூழல் நிலைத்தன்மை பிரச்சினைகளில் அறிவாற்றல், திறன்பயிற்சி, அனுபவம் ஆகியவற்றைப் பெற இத்திட்டம் இளையர்களுக்கு உதவும்.

இளையர்களுக்குத் தொண்டூழிய வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் அமைப்பான சிங்கப்பூர் இளையர் படையினர், ‘யெஸ்’ தலைமைத்துவத் திட்டத்தில் சேரும் இளையர்களை நெறிப்படுத்துவர்.

‘யெஸ்’ தலைமைத்துவத் திட்டத்தில் 17 முதல் 25 வயதுள்ளவர்கள் சேரலாம். ஆர்வமுள்ளவர்கள் இப்போது முதல் செப்டம்பர் 1ஆம் தேதிக்குள் https://form.gov.sg/#!/60cc32ca82aa8f0011a46540 என்ற இணையப்பக்கம் வழியாக விண்ணப்பிக்கலாம்.

பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்கள், ‘யெஸ்’ தூதர்களாக தேசிய சுற்றுப்புற வாரியத்தால் அங்கீகரிக்கப்படுவர். அவர்களுக்குத் தொண்டூழியம் செய்வதுடன் வாரியத்தின் நடவடிக்கைகளில் பங்குபெறவும் நீடித்த நிலைத்தன்மை திட்டங்களில் பிறர்க்கு வழிகாட்டவும் வாய்ப்பு கிடைக்கும்.

இளையர்கள் தொடர்புகளை ஏற்படுத்தி, நீடித்த நிலைத்தன்மை சார்ந்த பிரச்சினைகளைப் பற்றி கலந்துபேச ஏதுவாக, அடுத்த ஆண்டு ஒரு கருத்தரங்கை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தலைமைத்துவத் திட்டப் பங்கேற்பாளர்கள், தாங்கள் முன்னெடுக்கும் பசுமைத் திட்டங்களின் செயல்பாடு பற்றி விவரித்து, கருத்துகளையும் ஆதரவையும் பெற கருத்தரங்கு வழிவகுக்கும்.

‘யெஸ்’ திட்டத்தின்கீழ் விரைவில் நடப்புக்கு வரவுள்ள ஒரு பசுமைத் திட்டத்தில், காலியான அழகு சாதனக் கலன்களைப் பொதுமக்கள் வெவ்வேறு இடங்களில் ஒப்படைக்கலாம். தேசிய பல்கலைக்கழகத்தின் தற்போதைய, முன்னாள் மாணவர்கள் அவற்றைப் பயனுள்ள புதிய பொருள்களாக உருமாற்றுவர்.

“சிங்கப்பூரின் நீடித்த நிலைத்தன்மைப் பயணத்தில் நம் இளையர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். அவர்களது கட்டற்ற ஆற்றலையும் சிந்தனைகளையும் நாம் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறோம்,” என்று நீடித்த நிலைத்தன்மை, சுற்றுப்புற அமைச்சர் திருவாட்டி கிரேஸ் ஃபூ கூறியுள்ளார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.